2018 மே 29]

அதன் கிளைகள், நகர கூட்டுறவு வங்கி மற்றும் அதன் கிளைகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின்மூலம், கூட்டுறவு வங்கிகளின் விதிகளுக்குட்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழக கடன் உதவித் திட்டங்கள் குறித்த விவரங்கள் அனைத்தும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) *இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தூத்துக்குடி, ஸ்டெர்லைட் ஆலை விவகாரம்-பேரவைத் தலைவரின் சிறப்பு அதிகாரத்தின்கீழ் பேச அனுமதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறீர்கள்? சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் தூத்துக்குடியில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் ** செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, அதுகுறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்று காலையிலேயே உங்களிடத்திலே தந்திருக்கிறோம். எனவே, இந்த அவையை ஒத்திவைத்து அந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு நீங்கள் நேரம் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். அதாவது, பொதுவாக ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுப்பதற்கு*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

உங்களுக்கு முழு உரிமை இருக்கிறது. ஆனால், இன்றைக்கு இதே பொருள் agenda-வில் இடம் பெற்றுள்ளது. ஏற்கெனவே மூன்று உறுப்பினர்கள் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடுகள்)* இருங்கள். ஆகவே, அந்த அடிப்படையில் ஒத்திவைப்புத் தீர்மானம் என்று இதை நான் எடுத்துக்கொள்ள முடியாது. *(குறுக்கீடுகள்)* இருங்கள், நான் சொல்வதற்குள் எல்லோரும் பேசினால், நான் எப்படிப் பேசுவது? ஆகவே, ஏற்கெனவே ஆய்விற்கென்று முன்னரே ஒதுக்கியிருக்கின்ற ஒரு பொருளைப் பற்றியோ, முன்னறிவிப்புக் கொடுக்கப்பட்டு, விரைவில் பேரவைமுன் வர இருக்கும் நிலையில் உள்ள தீர்மானத்தின் பொருள் பற்றியோ, முன்கூட்டியே விவாதத்தை எழுப்புவதாக தீர்மானம் இருக்கக் கூடாது என்ற விதி உங்களுக்குத் தெரியும். இருந்தாலும், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.பி. சண்முகநாதன், திரு. எம். தமிமுன் அன்சாரி மற்றும் திரு. டிடிவி தினகரன் ஆகியோர் விதி 55-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் இன்று காலை 9-00 மணிக்கு என்னிடம், விதி 56-ன்கீழ் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, அதை நான் எடுத்துக்கொள்வது விதியின்படி சரியாக அமையாது. இன்று காலை 9-00 மணிக்கு காங்கிரஸ் சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்களும் விதி 55 மற்றும் விதி 56-ன்கீழ் அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கொடுத்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. ஐ. பெரியசாமி, திருமதி பி. கீதா ஜீவன், திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் ஆகியோரும் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-50

மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ் அவர்கள் 9-40 மணிக்கு விதி 55-ன்கீழ் ஒரு notice கொடுத்திருக்கிறார். இந்தப் பொருள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக விவாதிக்க வேண்டுமென்று சொன்னால், நம்முடைய சட்ட விதிகளின்படி சரியாக அமையாது என்கிற காரணத்தினாலும், இதை ஒரு முக்கியமான பிரச்சினையாக நீங்கள் எழுப்புகிற காரணத்தினால், நான் உங்களைப் பேச அனுமதிப்பது என்பது, எனக்கு இருக்கிற சிறப்பு அதிகாரம்; விதி 286-ஐ பயன்படுத்தி, வேண்டுமென்றால்

உங்களை அதில் சேர்த்துக்கொள்கிறேன். உங்களுக்குப் பேசுவதற்கு அனுமதி வழங்குகிறேன். ஆனால், ஒத்திவைப்புத் தீர்மானம் என்று நீங்கள் கொடுத்ததை, என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது, அதற்கு நான் ஒன்றும் சொல்ல முடியாது. ஆகவே, அந்தப் பொருள், சூழ்நிலை குறித்து உங்களுக்கும் தெரியும். இருந்தாலும், சூழ்நிலையைக் கருதி, உங்களை நான் பேசுவதற்கு, கட்சிக்கு ஒருவர் என்கிற முறையில் அனுமதிக்க ஏற்பாடு செய்கிறேன். அதிலே, முதலிலே நிகழ்ச்சிநிரலின்படி நான் வருகிறேன். முதலில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அழைப்பது வழக்கம். ஆனால், இன்றைக்கு ஏற்கெனவே இதே பொருள் குறித்து agenda-ல், நான் எடுத்து விட்டேன். ஆகவே, அந்த நிகழ்ச்சிநிரலின்படி நான் முதலில், அந்த மூன்று பேரையும் அழைத்துவிட்டு. . . (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் உங்களை அழைக்கிறேன். (குறுக்கீடு) சரி, பேசுங்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் விதிகளைச் சுட்டிக்காட்டினீர்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். தங்களுடைய பெருந்தன்மையையும், எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து பேசுவதற்கு அனுமதிப்பதாகச் சொல்கிறீர்கள். அதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், சட்டத்தின் அடிப்படையில், இந்த மன்றத்தில், எதிர்க்கட்சித் தலைவரோ, வேறொரு உறுப்பினரோ Zero hour-ல் பேசுவதற்கு வாய்ப்பிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Zero hour-ல் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எல்லோரும் பேசுவதற்கான முன்னுரிமையை நான் கொடுக்கிறேன். அதில் மாற்றம் இல்லை. ஆனால், இன்றைக்கு அந்த Zero hour-ஐ நாம் பயன்படுத்த முடியாது. ஏனென்று கேட்டால். . . (குறுக்கீடு) இல்லை, நான்தான் அந்தப் பொருள் குறித்து படித்துவிட்டேனே! (குறுக்கீடுகள்)

திரு. துரைமுருகன்: நீங்கள் சொல்வதை நான் மறுக்கவில்லை. அதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இரண்டில் ஒன்று செய்யுங்கள். ஒன்று, Zero hour என்று எடுத்துக்கொண்டு, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரை நீங்கள் பேச அனுமதிக்க வேண்டும். இல்லாவிட்டால், நீங்கள் குழப்பி எடுத்து . . . (குறுக்கீடு) சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்ளுங்கள். அதில்,

முதலில் எதிர்க்கட்சித் தலைவரைப் பேச அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் குழப்பம் எதுவுமில்லை. நான் தெளிவாகத்தான் பேசுகிறேன்.

திரு. துரைமுருகன்: நீங்கள் ரொம்ப தெளிவுதான் சார். (குறுக்கீடு) ரொம்ப விவரமாகத்தான் சொல்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நான் சரியாகத்தான் பேசுகிறேன். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்திருக்கிற காரணத்தினால், விதி 55-ன்கீழ், அதனைக் கொண்டு போய் சேர்க்க நான் விரும்பவில்லை. விதி 55-ன்கீழ் மூன்று உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிவிப்பு கொடுக்காமல் இருந்திருந்தால், நான் நிச்சயமாக இதை ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொண்டு, நீங்கள் சொல்வதுபோல், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அழைத்து, நான் பேச அனுமதி அளித்திருப்பேன்.

திரு. துரைமுருகன்: உங்கள் பெருந்தன்மையை நான் வரவேற்கிறேன். (குறுக்கீடு) அதில் மாறுபட்ட கருத்தில்லை. We obey the Chair. நாங்கள் கேட்பது இரண்டுதான். நீங்கள் சட்டப்படி எல்லாவற்றையும் செய்யலாம். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு Zero hour-ல் பேச சபாநாயகர் அனுமதிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் எடுத்தவுடனே உங்களிடம் சொல்லிவிட்டேன். முதலிலே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை அழைக்க வேண்டுமென்ற விதி ஏற்கெனவே இருக்கிறது. (குறுக்கீடு) இருங்கள். முதலில் agenda-ல், அந்த மூன்று உறுப்பினர்களின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. அதனால் அதற்குப் பின்னாலேதான். . . (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: அதை மீறுகிறீர்கள். (குறுக்கீடு) சார், இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்கள் தெரியுமா? Agenda rules and regulations எல்லாவற்றையும் தூக்கி வைத்து விட்டு, எங்கு வருகிறீர்கள் என்றால், சிறப்பு விதி 286-க்கு வந்து விட்டீர்கள். அதனால், அதெல்லாம் அடிபட்டுப் போய்விட்டது. நீங்கள் எந்த அடிப்படையில் வருகிறீர்கள் என்றால், சபாநாயகருக்கு கொடுக்கப்பட்ட பிரத்யேக அதிகாரத்திற்கான Rules-க்கு வந்து விட்டீர்கள். அந்த Rules-க்கு வந்த பிறகு, இங்கு முன்னுரிமை

கொடுக்க வேண்டும். (குறுக்கீடு) அதைத்தான் நான் கேட்கிறேன். நீங்கள் பழைய Rules பிரகாரம் அதுபோன்று எடுத்தீர்கள் என்றால், அவர்களைப் பேச விடலாம். இப்போது நீங்கள் அதையெல்லாம் விட்டுவிட்டீர்கள். இப்போது எதில் வருகிறீர்கள் என்றால். . . (குறுக்கீடு) அந்தச் சிறப்பு அதிகாரத்தின்கீழ்தான் இப்போது எங்களை அனுமதிக்கிறீர்கள். எனவே, அந்த வகையில் எங்களுடைய கட்சித் தலைவர் அவர்களை முதலில் பேசுவதற்கு நீங்கள் அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை, அது முடியாது என்று நீங்கள் சொன்னீர்கள் என்றால், 5 நிமிடங்கள் zero hour-ல் பேசுவதற்கு அனுமதி அளியுங்கள். பேசி முடித்துவிட்டு நாங்கள் சென்று விடுகிறோம். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை நான் பேசவே கூடாது என்று சொன்னால்தான், நீங்கள் பேசுவது சரியாக இருக்கும். (குறுக்கீடுகள்) 286-வது விதியைப் பயன்படுத்தி இந்தப் பொருள் குறித்து அவர் பேசுவதற்கு நான் அனுமதி அளிக்கிறேன். (குறுக்கீடுகள்) ஆனால், நிகழ்ச்சிநிரலில் உள்ளவாறு எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் என்னை confuse செய்ய முடியாது. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எவ்வளவுதான் இதுகுறித்துப் பேசினாலும். . . (குறுக்கீடுகள்) இல்லை. நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்படவில்லை என்றால்தான், நான் எதையும் zero hour-ல் எடுத்துக்கொள்வேன். நிகழ்ச்சிநிரலில் இதுகுறித்து ஏற்கெனவே நான் சேர்த்துவிட்டேன். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய சாதுர்யம், நீங்கள் அவையை நடத்த வேண்டுமென்பதிலே காட்டுகின்ற அக்கறை, அனைவரையும் அரவணைத்துச் செல்ல வேண்டுமென்கின்ற நுண்மான் நுழைபுலம் இவை யாவையும் நாங்கள் அறிவோம். ஆனால், எந்த ஓர் அலுவலாக இருந்தாலும், zero hour-க்கு முன்னுரிமை இருக்கிறது என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, தாங்கள், தங்களுடைய பிரத்யேக அதிகாரத்தைப் பயன்படுத்தி zero hour-ல் 5 நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதி அளியுங்கள். நாங்கள் பேசிவிட்டுப் போகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் போக வேண்டாம். உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு zero hour-ல் பேசுவதற்குத்தான் நான் இன்றைக்கு அனுமதி அளித்தேன். இந்தப் பொருள் குறித்துப் பேசாமல் வேறு பொருள் குறித்து அவர் பேசியிருந்தால், முழுமையாக அவர் பேசுவதற்கு நான் அனுமதியளித்திருப்பேன். இதே பொருள் குறித்து அவர் பேசுகின்ற காரணத்தினால்தான். . . (குறுக்கீடு) நான் ஏற்கெனவே நிகழ்ச்சி நிரலில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பதுதான் விதி. இருந்தாலும், அவரை நான் முழுமையாக ஒதுக்க விரும்பவில்லை. அவர் எழுப்புகிற பிரச்சினையை, இந்த அவையில் அவருடைய குரலும் ஒலித்து, அவரும் இந்த விவாதத்திலே பேச வேண்டுமென்பதற்காகத்தான், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்த மூன்று பேரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு முதலில் கொண்டு வந்துவிடுவார்கள். அதன் பிறகு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசட்டும். அதற்குப் பிறகு, காங்கிரஸ் கட்சி மற்றும் மற்ற கட்சி உறுப்பினர்களை நான் அழைக்கிறேன். விதிகளின்படி நிகழ்ச்சிநிரலிலுள்ள அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த 3 உறுப்பினர்களையும் பேச முதலில் அழைக்க வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எவ்வளவு கட்டுப்படுகிறோம் என்பதற்கு இது ஓர் உதாரணம். இவ்வளவு நேரம் நீங்கள் பேசியதை நாங்கள் ஏற்றுக்கொண்டு, நீங்கள் தீர்மானித்ததன்படி கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர்கள் முதலில் பேசிய பிறகு, எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் பேசுவற்கு அனுமதி அளியுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மிக்க நன்றி. இன்றைக்குச் சரியாக ஒத்துக்கொண்டீர்கள். ரொம்ப நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடு) விதிகளின்படி முதலில் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு கொடுத்த உறுப்பினர்களைப் பேச அழைக்கிறேன்.*